## விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2011

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்து எழும் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிலைத்தகு தன்மை.

இந்நிதியம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட அதிகாரச் சட்டமொன்றினாலோ அல்லது வேறேதேனும் சட்டரீதியான அதிகாரச் சட்டமொன்றினாலோ தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட நிதியமொன்று அல்ல என்பதுடன் ''கொவிசெத'' லொத்தர் வருமானத்திலிருந்து 10% ஆன நலன்களைப் பெற்று அப்பணத்தினை முதலீடு செய்ததிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டி வருமானத்தினை விவசாயிகளின் சேமநலனுக்காக பயன்படுத்துவதனை நிர்வகிப்பதற்காக தாபிக்கப்பட்ட நிதியமொன்றாகும். 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 3.3 (அ) பந்தியின் பிரகாரம் நியதிச்சட்ட ரீதியற்ற நிதியங்களை நடாத்திச் செல்லல் அரசியலமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள, பாராளுமன்றத்தின் பொது நிதிக் கட்டுப்பாட்டின் மீதான பொறுப்புக்களை நலிவடையச் செய்வதனால், அமைச்சுக்களின் கீழ் நடாத்தப்படுகின்ற அனைத்து நியதிச்சட்ட ரீதியற்ற நிதியங்களும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் முடிவுறுத்தப்பட்டு அவற்றின் பண மீதிகள் அரசாங்க நிதித் திணைக்களத்தின் ஆலோசனையின் படி திரட்டு நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அவ்வாறே அச்சுற்றறிக்கையின் (அ) பந்தியின் பிரகாரம் நியதிச் சட்டரீதியற்ற ஏதேனும் நிதியமொன்றை தொடர்ந்தும் நடாத்துவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பின் அவ்வாறான நிதியங்களை பாராளுமன்ற அதிகாரச் சட்டமொன்றினால் சட்டரீதியாக்குவதற்கு இயலுமான முறையில் குறித்த காரணங்களைக் குறிப்பிட்ட அரசாங்க நிதித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்படல் வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்விடயங்களின் பால் உடனடியான கவனம் கோரப்படுகின்றது. உத்தேச அதிகாரச்சட்டத்தின் இறுதி வரைவானது சட்ட வரைஞருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என செயலாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வடக்கு வசந்தம் விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கைவிடப்பட்ட வயற்காணிகளை செய்கை பண்ணும் செயற்திட்டத்திற்காக 2009 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்தி ஆணையாளருக்கு வழங்கப்பட்ட ரூபா 4,000,000 முற்பணத் தொகையில் 2010 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,080,000 தொகையான செலவினம் மீளாய்வாண்டிற்கான அபிவிருத்திச் செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) (i) மீளாய்வாண்டின் இறுதியில் திறைசேரி உண்டியல்களின் முதலீடு ரூபா 99,878,484 ஆன போதிலும் ஐந்தொகையில் இது ரூபா 99,999,999 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) திறைசேரி உண்டியல்களின் முதலீட்டிற்கான ரூபா 1,601,338 தொகையான வட்டி வருமானம் ஆண்டின் வருமானமாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

நிதியத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிளிற்காக பெறப்பட்ட ரூபா 219,234 தொகையான காப்புறுதி இழப்பீடு 2009 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப் பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பெறவேண்டிய கணக்குகள்

(I) 02 தனியார் நிறுவகங்களிற்கு முறையே 2002 ஆம் 2005 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட ரூபா 2,000,000 மற்றும் ரூபா 7,000,000 கடன் தொகையில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,399,700 தொகையும் ரூபா 6,708,333 தொகையும் விளைவற்றுக் காணப்பட்டன. இக் கடன் தொகைக்காக மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 250,668 ஆகக் கணிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் நிலுவையாகக் காணப்பட்ட பெறவேண்டிய வட்டி வருமானம் ரூபா 1,474,972 ஆகும்.

(II) ஐந்தொகையின் நீண்டகாலக் கடனின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 107,871,579 தொகையான விவசாய வங்கிக் கடனில் பல வருடகாலமாக அறவிடப்படாதிருந்த ரூபா 9,112,579 தொகையான விவசாய குழுக் கடன் மீதிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(III) நிதியத்தினால் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 18,345,360 தொகையான முற்பணங்கள் வழங்கப்பட்டு 08 ஆண்டுகள் அளவான நீண்ட காலம் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவற்றை தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(IV) ஊவா மாகாண சபைக்கு கடந்த ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த பின்வரும் முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதியிலும் தீர்க்கப்படாதிருந்த போதிலும் சிறிய நீர்ப்பாசனங்களை புனரமைக்கும் விசேட செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போதும் ரூபா 3,000,000 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

| குறுங்காலக் கடன் | 2011.12.31 இல் உள்ளவாறான கடன் மீதி | வழங்கப்பட்ட வருடம் |
|---|---|---|
| | ரூபா | |
| பிரதி கமநல சேவை ஆணையாளர் (ஊவா) | 1,679,901 | 1994 |
| ஊவா மாகாண சபைக்கு ( சோளம் கொள்வனவு) | 1,916,623 | 2003 |
| | 3,596,524 | |

(V) நிதியத்தினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 169,812,793 தொகையான குறுங்கால கடன் மீதியில் 5 ஆண்டுகள் கடந்த விவசாய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினதும் செயற்பாட்டு நிதியத்தினதும் முறையே ரூபா 7,923,175 மற்றும் ரூபா 44,255,850 தொகையான கடன் மீதிகள் 06 ஆண்டுகளுக்கும் 11 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக நிலவிவரும் ரூபா 117,633,768 தொகையான கடன் மீதி நிலுவையாகக் காணப்பட்டன.

(VI) அறவிட முடியாத 10 மோட்டார் வாகனக் கடன்களின் நிலுவைக் கடன் மீதி ரூபா 273,414 ஆனதுடன் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் பிணையாளிகளிடம் இருந்து அறவிடப்படுவதற்கோ அல்லது அவர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்களை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் மீளப் பெற்றுக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(VII) ஐந்து உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் மீள நிறுவகத்தின் பொறுப்பிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் அம் மோட்டார் வாகன உடன்படிக்கையின் பிரகாரம் ஏலவிற்பனையிடுவதன் மூலம் அறவிடப்பட உள்ள ரூபா 304,856 தொகையான நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிராமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(I) ஐந்தொகையில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் ரூபா 7,241,656 தொகையான சேமிப்புக் கணக்கு மீதிகள் பல வருட காலமாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அக் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தப்படுவதற்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(II) நடைமுறையல்லாத பொறுப்புகளின் கீழ் விவசாயிகளின் வைப்பாக ரூபா 697,644 தொகையான இனங்காணப்படாத பொறுப்பு பல வருட காலமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கியிராமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் தொடர்பான விபரம் |
|---|---|
| 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை 04:1 | நிதியத்தின் பாதீடு இதற்கு முன்னைய ஆண்டின் செப்தெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டு செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கும் நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்து ரூபா 167,551,648 தொகையான மிகை ஏற்பட்டிருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டுக்கான மிகை ரூபா 89,739,136 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போதும் ரூபா 77,812,512 தொகையான தேறிய அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. ‘‘கொவிசெத’’ லொத்தர் வருமானம் ரூபா 13,659,260 ஆலும் முதலீட்டு வட்டித் தொகை ரூபா 14,754,557 ஆலும் அதிகரித்தமையும் அபிவிருத்திச் செலவினம் ரூபா 49,401,145 ஆல் குறைவடைந்தமையும் இந்த அதிகரிப்பிற்குக் காரணமாகியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திணைக்களம், மாகாண சபை மற்றும் பல்வேறு நிறுவகங்களினூடாக பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 237.03 மில்லியன் தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 118.74 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட ரூபா 118.74 மில்லியன் தொகையில் ரூபா 87.63 மில்லியன் தொகை முற்பணமாக காணப்பட்டதுடன் அபிவிருத்திச் செலவினமாக ரூபா 30.43 மில்லியன் மாத்திரமே காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது ரூபா 93.87 மில்லியன் தொகையான இரண்டு செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது நிதியத்தினால் சிறிய நீர்ப்பாசன புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறிய நீர்ப்பாசன மீளமைப்பு நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்காக விவசாய அபிவிருத்தி ஆணையாளருக்கு 2011 ஆகஸ்ட் 16 ஆம் திகதி ரூபா 19,850,000 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் வருட இறுதி வரையிலும் அச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சேதனப் பயிர்களாக 5 அன்னாசி கிராமங்களை உருவாக்கும் செயற்திட்டத்திற்காக வடமத்திய மாகாண சபைக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1,988,707 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் இதில் விவசாயிகளுக்கு பிளாஸ்டிக் வாளி, மண்வெட்டி, சவள் மற்றும் வீல் பரோ போன்ற உபகரணங்கள் வழங்கப்படுவதற்காக ரூபா 312,622 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அவை பகிர்ந்தளிக்கப்பட்டமைக்கான சான்றுகள் இருக்கவில்லை.

(ஆ) தேனீ பெட்டிகள் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஊவா மாகாணசபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 138,600 தொகை அபிவிருத்திச் செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான பட்டியல்களும் முன்னேற்ற அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாத்தறை மாவட்டத்தின் விவசாய தலைவர்களை உறுதிப்படுத்தும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்தப்படுவதற்காக நிதியத்தினால் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய நடவடிக்கை ஆராய்ச்சி நிறுவகத்திற்கு ரூபா 300,000 தொகை 2011 ஆகஸ்ட் 26 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் இந் நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொண்ட விவசாய தலைவர்களின் வருகைப் பதிவேடும் செலவின அறிக்கை ஒன்று வழங்கப்பட்டிராததுடன் இது மீளாய்வாண்டின் அபிவிருத்திச் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஈ) 2011 ஆம் ஆண்டின் போது அனுராதபுர மாவட்டத்தின் விசேட சோளப் பயிர்ச்செய்கைச் செயற்திட்டத்திற்காக விவசாய நம்பிக்கை நிதியத்தில் இருந்து 2% வட்டிக்கு ரூபா 17,800,000 தொகையான கடன் விவசாய அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

I. நிதியத்தினால் இக் குறுங்கால கடனை வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் கடன் தொகை மீளத் தீர்க்கப்பட வேண்டிய காலம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

II. கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திட்டத்தின் பிரகாரம் இச் செயற்திட்டம் சிறு போகத்தின் மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டு ஆகஸ்ட் மாதம் வரை கடன் தொகையும் தீர்க்கப்பட்டு பூர்த்தியாக்கப்பட வேண்டிய போதிலும் கடன் தொகை 2011 யூன் மாதம் அதாவது

விவசாயிகளினால் விளைச்சல் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்ட காலத்தின் போதே விடுவிக்கப்பட்டிருந்தது.

III. இந்த ரூபா 17,800,000 கடன் தொகையில் ஆடியாகல மற்றும் பலாகல கமநல நிலையத்திற்காக ரூபா 500,000 வழங்கப்பட்டிருந்ததுடன் சிறு போகத்திற்கான சோளம் மற்றும் சோயாப் பயிர்ச்செய்கைகளின் விளைச்சல் அறுவடைசெய்யப்பட்டு முடிந்தமையால் அந்தப் பணம் தேவையற்றதாகக் குறிப்பிட்டு பணம் மீளச் செலுத்தப்பட்டிருந்தது. இதன் படி குறித்த சந்தர்ப்பத்தின் போது செயற்திட்டம் அங்கீகரிக்கப்பட்டு ஏற்பாடுகள் வழங்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல் ஆளுகையும்

### 4.1 செயற்பாட்டுத் திட்டம்

நிதியத்தின் செயற்பாட்டிற்காக வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த அறிக்கையினை சபையில் முன்வைத்தல்

திறைசேரி பிரதிச் செயலாளரின் 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய இல. பீஎப்/ 423 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைஇன் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கடன் வழங்கல் மற்றும் கடன் அறவீடு
(ஆ) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்
(இ) நிதியப் பயன்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு